DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW - 42

| | | |
|---|---|---|
| Name | : திரு.சுப்பையா | Caste: |
| Father's Name: | திரு. கருப்பையா | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 23rd day of April -2024.

**A1, A3, A5 , A9, A13, A14, A16 present. A2, A6 to A8, A11, A15, A17 and A18 called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed.**

**23.04.2024.**

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், சிவகாசி உட்கோட்டத்தில் காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2008 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது 16.05.2008 அன்று காலை 11.30 மணிக்கு வங்குடி கிராமத்தை சேர்ந்த ராஜலிங்கம், த.பெ.காசிநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி தன்னுடைய தம்பிகளையும், தன்னுடைய தகப்பனாரையும் கொலை செய்து விட்டார்கள் என்பதாக ஒரு எழுத்துமூலமான புகார் கொடுத்தார். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த புகாரின் அடிப்படையில் நான் ஒரு வழக்கினை நிலைய கு.எண்.130/2008 ஆக சட்டபிரிவுகள் 147, 148, 341, 324, 326, 307, 302 மற்றும் உ/இ 120(பி) இ.த.ச–வின் கீழ் பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட அச்சுப்படிவ முதல் தகவல்

அறிக்கை அ.சா.ஆ.53. அந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை துரித தபால் மூலம் ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை என் வசம் புலன்விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன்.

புகார்வாதி கொடுத்த புகாரின் மூலம் 5 நபர்கள் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. பொதுவாக 3 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கொலை செய்யப்பட்ட வழக்குகளை காவல்துணை கண்காணிப்பாளர் நிலையிலான அதிகாரி தான் விசாரணை செய்ய வேண்டும் என்ற விதி இருக்கின்ற காரணத்தினால் நான் உடனடியாக ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளருக்கு தகவல் கொடுத்து மேற்படி வழக்கினை புலன்விசாரணை செய்யும்படி கேட்டுக்கொண்டேன். ஆனால் அவர் அந்த வழக்கினை புலன்விசாரணை செய்ய மறுத்ததோடு என்னையே புலன்விசாரணை மேற்கொள்ளும்படி பணித்தார்.

எனவே நான் அவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்ததால் நான் எனது உயர் அதிகாரிகளுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் கொடுத்து சம்மந்தப்பட்ட கிராமத்தில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும்படி வேண்டுகோள் விடுத்தேன். பின்னர் நான் சம்பவம் நடந்த வங்குடி கிராமத்திற்கு சென்று சம்பவஇடத்தை பார்வையிட்டேன்.

சாட்சிகள் வேல்முருகன், பாலு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.54. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.55. பார்வைமகஜரில் வங்குடி கீழதெரு பாலுசாமி வீட்டிலிருந்து சுமார் 60 மீ துாரத்தில் முருகன் கோவில் தெருவில் பாஸ்கரன், த.பெ.முருகேசன் என்பவரது ஓட்டுவீட்டிற்கு முன்பு கிழக்காக கவிழ்ந்த நிலையில் சுரேஷ் என்பவரது பிரேதமும், அதற்கு தென்கிழக்காக சுமார் 50 மீ தொலைவில் கீழதெருவில் சின்னதுரை, த.பெ.குமரன் என்பவரது வீட்டின் முன்பு தெற்கு வடக்காக ஒருக்கலித்த நிலையில் தலையில்லாத பிரபுவின் பிரேதமும், அதற்கு தென்கிழக்கில் சுமார் 175 மீட்டர் துாரத்தில் கீழதெருவில் காமராஜ் வீட்டிற்கும் வேலாயுதம் வீட்டிற்கும் இடையில்

வடக்கு தெற்காக மல்லாந்த நிலையில் மகாலிங்கம் பிரேதமும், அதற்கு மேற்கே சுமார் 3 மீட்டர் தூரத்தில் பூராசாமி என்பவரது பெட்டிகடைக்கு முன்பாக வடக்குதெற்காக உடல் கவிழ்ந்த நிலையில் காசிநாதன் பிரேதமும், அவரது பிரேதத்திற்கு தெற்கே பூராசாமி பெட்டி கடைக்கு மேற்குபக்கமாக கிழக்குமேற்காக மல்லாந்த நிலையில் தலைதுண்டிக்கப்பட்ட தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரின் பிரேதமும் காணப்பட்டது.

அங்கிருந்து சுமார் 125 மீட்டர் வடமேற்காக உள்ள காளியம்மன் கோவில் முன்புறமுள்ள சூலத்தில் தர்மலிங்கத்தின் தலை குத்தப்பட்டிருந்தது. பிரபுவின் பிரேத்திலிருந்து சுமார் 300 மீட்டர் துாரத்தில் தென்மேற்காக காளியம்மன் கோவில் பின்புறம் பிரபுவின் தலை காணப்பட்டது. சக்திவேல், த.பெ.பொன்னுசாமி என்பவரது வீட்டின் முன்பாக தரையில் பிரபுவின் தலை கிடந்தது. பின்னர் இந்த வழக்கில் எனது புலன்விசாரணைக்கு உதவியாக உயர்அதிகாரிகளின் உத்தரவின்படி ஆண்டிமடம் காவல்நிலைய ஆய்வாளர் சீனு.ராஜேந்திரன் மற்றும் ஜெயங்கொண்டம் காவல்நிலைய ஆய்வாளர் மகாதேவன் ஆகியோர் வந்தார்கள்.

அதில் இறந்துபோன சுரேசின் பிரேதத்தின் மீதும், இறந்துபோன பிரபுவின் தலையில்லாத உடல் மீதும், தனியாக கிடந்த தலையின் மீதும் நான் பிரேதவிசாரணை மேற்கொண்டேன். இறந்துபோன மற்ற நபர்களின் உடல்களின் மீது மேற்படி ஆய்வாளர்கள் சீனு.ராஜேந்திரன் மற்றும் மகாதேவன் ஆகியோர் மேற்கொண்டார்கள். ஆய்வாளர் மகாதேவன் என்பவர் இறந்துபோன தர்மலிங்கம்(எ) சங்கரின் தலையில்லாத உடல் மற்றும் தலை ஆகியவற்றின் மீது பிரேதவிசாரணை மேற்கொண்டார். ஆண்டிமடம் காவல் ஆய்வாளர் சீனு.ராஜேந்திரன் இறந்துபோன காசிநாதன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்களது பிரேதங்களின் மீது பிரேதவிசாரணை மேற்கொண்டார்.

இறந்துபோன சுரேசின் பிரேதத்தின் மீது 14.00 மணி முதல் 15.00 வரை பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.56. பிரேதவிசாரணை முடித்ததிற்கு பிறகு சுரேசின் பிரேதத்தை த.கா.495 திரு.அன்பழகன் என்பவர் மூலமாக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு பிரேதபரிசோதனை செய்வதற்காக அனுப்பி வைத்தேன்.

பிரபுவின் தலையில்லாத உடல்மீது 15.10 மணி முதல் 15.45 மணிவரை பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.57. பிரவின் தலைமீது 15.45 மணி முதல் 16.00 மணி வரை பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.58. பின்னர் பிரபுவின் தலையை தலையில்லாத உடலுடன் இணைத்து வைத்து மற்றொரு பிரேதவிசாரணை மேற்கொண்டு மற்றொரு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.59.

பின்னர் பிரபுவின் உடல் மற்றும் தலையை பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக த.கா.671 திரு.முருகன் என்பவர் மூலமாக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். மேற்கண்ட பிரேதங்களை பிரேதபரிசோதனைக்கு அனுப்பிவைத்த சமயத்தில் அதற்குரிய வேண்டுகோள் கடிதங்களையும் கொடுத்து அனுப்பினேன். சுரேஷ் சம்மந்தமாக கொடுக்கப்பட்ட பிரேதபரிசோதனை வேண்டுகோள் கடிதம் படிவம் 86 உடன் அ.சா.ஆ.60.

இறந்துபோன பிரபுவின் தலையை பிரேதபரிசோதனை செய்வதற்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் படிவம் 86 உடன் அ.சா.ஆ.61. அவரது தலை மற்றும் உடல் ஆகியவற்றை பிரேதபரிசோதனை செய்வதற்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் படிவம் 86 உடன் அ.சா.ஆ.62.

பின்னர் கொலையுண்டு இறந்துபோன நபர்கள் கிடந்த இடங்களிலிருந்து ரத்தம் தோய்ந்த மண் மற்றும் ரத்தம் படியாத மண் ஆகியவற்றை மாதிரிக்காக சேகரித்தேன். இறந்துபோன பிரபுவின் உடல் கிடந்த சிமெண்ட் ரோட்டிலிருந்து ரத்தம்தோய்ந்த காரை மற்றும் ரத்தம் படியாத காரை ஆகியவை கைப்பற்றப்பட்டதற்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.2 மற்றும் அ.சா.பொ.3.

இறந்துபோன பிரபுவின் தலை கிடந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவை கைப்பற்றப்பட்டதற்கு தயார் செய்யப்பட்ட

கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.4 மற்றும் அ.சா.பொ.5.

இறந்துபோன சுரேஷ் என்பவரது பிரேதம் கிடந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவை கைப்பற்றப்பட்டதற்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.63. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.6 மற்றும் அ.சா.பொ.7.

சம்பவ இடத்திற்கு புலன்விசாரணைக்கு எனக்கு உதவியாக வந்த ஜெயங்கொண்டம் காவல்நிலைய ஆய்வாளர் மகாதேவன் என்பவர் இறந்துபோன தர்மலிங்கம், த.பெ.காசிநாதன் என்பவர் உடலின் மீது பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தர். அதே ஆய்வாளர் மேற்படி தர்மலிங்கத்தின் உடல் கிடந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவற்ற மகஜர் தயார் செய்து கைப்பற்றியிருக்கிறார். அவரது கையொப்பம் எனக்கு தெரியும். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.64. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.8 மற்றும் அ.சா.பொ.9.

அதே ஆய்வாளர் மேற்படி தர்மலிங்கத்தின் தலையானது சூலத்தில் குத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த சூலம் ஒன்று மற்றும் ரத்தம்தோய்ந்த சிமெண்ட் காரை ஆகியவற்றை மற்றொரு மகஜர் தயார் செய்து கைப்பற்றியிருக்கிறார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.65. மேற்படி சூலம் அ.சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் தோய்ந்த சிமெண்ட் காரை அ.சா.பொ.10.

எனது புலன்விசாரணைக்கு உதவியாக சம்பவ இடத்திற்கு வந்திருந்த ஆன்டிமடம் காவல்நிலைய ஆய்வாளர் திரு.சீனு.ராஜேந்திரன் இறந்துபோன மகாலிங்கம் மற்றும் காசிநாதன் ஆகியோர்களது உடல்களின் மீது பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கைகள் தயார் செய்தார். அவர் என்னுடன் பணிபுரிந்தவர் என்ற காரணத்தினால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சியமானது அந்த அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.66 மற்றும் அ.சா.ஆ.67.

ஆய்வாளர் சீனு.ராஜேந்திரன் என்பவர் இறந்துபோன மகாலிங்கத்தின் உடல் கிடந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவற்றை மகஜர் தயார் செய்து கைப்பற்றியிருக்கிறார். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.11 மற்றும் அ.சா.பொ.12.

ஆய்வாளர் சீனு.ராஜேந்திரன் இறந்துபோன காசிநாதனின் உடல் கிடந்த இடத்திலிருந்து ரத்தம்தோய்ந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவற்றை மகஜர் தயார் செய்து கைப்பற்றியிருக்கிறார். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் முறையே அ.சா.பொ.13 மற்றும் அ.சா.பொ.14.

ஆய்வாளர் சீனு. ராஜேந்திரன் மேற்கண்ட இறந்துபோன மகாலிங்கம் மற்றும் காசிநாதன் ஆகியோர்களது உடல்களை பிரேதபரிசோதனை மேற்கொள்வதற்காக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு பிரேதபரிசோதனைக்குரிய வேண்டுகோள் கடிதங்களுடன் அனுப்பி வைத்திருக்கிறார். அந்த வேண்டுகோள் கடிதங்கள் படிவம் 86 உடன் முறையே அ.சா.ஆ.68 மற்றும் அ.சா.ஆ.69.

பின்னர் நான் சாட்சிகள் ராஜலிங்கம், த.பெ.காசிநாதன், ஜெயந்தி, க.பெ.தர்மலிங்கம், பவுனு க.பெ.சூரியமூர்த்தி, அமிர்தலிங்கம், த.பெ.காசிநாதன், கொளஞ்சி, த.பெ.சூரியமூர்த்தி, ஜெகதீஷ்வரன், த.பெ.பழனிவேல், மதியழகன், த.பெ.நடராஜன், பிரகாஷ், த.பெ.பாரிவள்ளல், ஜோதிவேல், த.பெ.சிவக்கொழுந்து, கோபி, த.பெ.கோவிந்தசாமி, செல்வம், த.பெ.துரைசாமி, பழனிவேல், த.பெ.நடராஜன், மல்லிகா, க.பெ.செல்வம், சரோஜா, க.பெ. நடராஜன், நடராஜன், த.பெ.தர்மன், மல்லிகா, க.பெ.கோவிந்தசாமி, ஜெயா, க.பெ. கொளஞ்சி, கோவிந்தசாமி, த.பெ.சின்னபையல், பானுமதி, க.பெ. பாரிவள்ளல், கைகேயி, க.பெ. மச்சகேந்திரன், வேல்முருகன், த.பெ.ராமசாமி, பாலு, த.பெ.அசுபதி, சரவணன், த.பெ.குணசேகரன், சத்தியமூர்த்தி, த.பெ.கோவிந்தசாமி, பால்ராஜ், த.பெ.உத்ராபதி ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன்.

மேற்படி சாட்சி சரவணன், த.பெ.குணசேகரன் ஜெயங்கொண்டத்திலுள்ள ஜெயாபோட்டோ ஸ்டுடியோவை சேர்ந்தவர். அவர் புகைப்படம் எடுப்பவர். நான் தகவல் சொல்லி அவரை சம்பவ இடத்திற்கு வரவழைத்து சம்பவ இடத்தில் கிடந்த இறந்துபோன நபர்களின் பிரேதங்களை புகைப்படம் எடுக்க செய்தேன். அதுதொடர்பாக அந்த சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அ.சா.பொ.15 வரிசை.

பின்னர் எனக்கு கிடைத்த தகவலின் படி இவ்வழக்கின் எதிரிகளான பழனிசாமி, தினேஷ், ராஜதுரை, பிரபாகரன், ரமேஷ், த.பெ.ராமசந்திரன், திருஞானம் ஆகியோரை எனது தனிப்படையை சேர்ந்த உதவி ஆய்வாளர்கள் உத்ராபதி மற்றும் முத்துகுமார், த.கா.அன்பழகன், த.கா.வரதராஜன், த.கா.முருகன், த.கா.முருகேசன், த.கா.பாண்டியன் ஆகியோர் அடங்கிய என் தலைமையிலான தனிப்படை உதவியுடன் சம்பவ தினத்தன்று அதாவது 16.05.2008 அன்று மாலை.17.30 மணிக்கு காடுவெட்டி பேருந்துநிறுத்தம் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன்.

சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் பால்ராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரிகளை நான் விசாரித்தபோது <u>எதிரி திருஞானம்</u> என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் 17.35 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி திருஞானம் 16.05.2008 தேதியன்று தங்களால் சம்பத்திற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை வெண்ணங்குழி பாதையில் உள்ள முனுசாமி கோவில் பின்புறமுள்ள முட்புதரில் மறைத்துவைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் அந்த ஆயுதங்களை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். எதிரி திருஞானம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.70.

பின்னர் நான் <u>எதிரி தினேசை</u> விசாரித்தபோது அவரும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 18.30 மணிக்கு பதிவு செய்தேன். எதிரி தினேஷ் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தின் போது பயன்படுத்திய ஆயுதங்களை

வெண்ணங்குழி ஓடை அருகிலுள்ள முனிகோவில் அருகில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.71.

பின்னர் எதிரி பழனிசாமியை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதேஇடத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 19.30 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி பழனிசாமி சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை வெண்ணங்குழி ஓடை அருகில் உள்ள முனியப்பர் கோவில் அருகிலுள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும் அவரை அழைத்துசென்றால் ஆயுதத்தை தங்கள் முன்பு எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.72.

பின்னர் எதிரி ரமேஷ், த.பெ.ராமசந்திரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 20.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் , அதே இடத்தில் வைத்து பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ரமேஷ், த.பெ.ராமசந்திரன் என்பவர் சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை வெண்ணங்குழி ஓடை அருகில் உள்ள முனி கோவில் அருகிலுள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும் அவரை அழைத்துசென்றால் ஆயுதத்தை தங்களிடம் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.73.

மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களிலிருந்து தெரியவந்த சங்கதியின் அடிப்படையில் அன்றைய தினம் 22.00 மணிக்கு வெண்ணங்குழி ஓடை அருகிலுள்ள முனிகோவில் முட்புதரிலிருந்து சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் பால்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி திருஞானம் எடுத்து ஆஜர் செய்த வெட்டுபாகம் 2 அடி பித்தளை பூண் போட்ட ½ அடி உள்ள சுமார் 2-1/2 நீளமுள்ள ரத்தம் படிந்த பட்டாகத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். அந்த

கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.74. என்னால் கைப்பற்றப்பட்ட மேற்படி பட்டா கத்தி அ.சா.பொ.16.

பின்னர் எதிரி தினேஷ் என்பவர் அதே இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த இரும்பு பாகம் 56 செ.மீட்டரும், பித்தளை பூண்போட்ட மரகைப்பிடியுடன் கூடிய 16 செ.மீ கைப்பிடி உள்ள மொத்தம் 72 செ.மீ நீளம் கொண்ட ரத்தகரை படிந்த பட்டா கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மற்றொரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 22.30 மணிக்கு கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.75. என்னால் கைப்பற்றப்பட்ட மேற்படி பட்டா கத்தி அ.சா.பொ.17.

எதிரி பழனிசாமி என்பவர் அதே இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்தசுமார் 12 நீளம் கொண்ட இரும்பு பூண்போட்ட கைப்பிடியுடன் கூடிய மொத்த நீளம் 57–1/2 செ.மீ உள்ள ரத்தம் படிந்த மற்றொரு பட்டாகத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மற்றொரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 22.15 மணிக்கு கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.76. என்னால் கைப்பற்றப்பட்ட மேற்படி பட்டா கத்தி அ.சா.பொ.18.

பின்னர் எதிரி ரமேஷ், த.பெ.ராமசந்திரன் என்பவர் அதே இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 13 நீளம் கொண்ட இரும்பு பூண்போட்ட கைப்பிடியுடன் கூடிய மொத்த நீளம் சுமார் 57 செ.மீ உள்ள ரத்தம் படிந்த மற்றொரு பட்டாகத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மற்றொரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 23.00 மணிக்கு கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.77. என்னால் கைப்பற்றப்பட்ட மேற்படி பட்டா கத்தி அ.சா.பொ.19.

பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நிலையம் திரும்பினேன். எதிரிகளை தக்க வழிமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

பின்னர் எனக்கு கிடைத்த தகவலின்படி இவ்வழக்கின் எதிரி சசிகலா என்பவரையும், எதிரி கனவள்ளி என்பவரையும் ஜெயங்கொண்டம் அனைத்து

மகளிர்காவல்நிலைய உதவிஆய்வாளர் திருமதி.கவிதா என்பவர் மூலமாக கைது செய்ய செய்தேன். மேற்படி உதவி ஆய்வாளர் மேற்படி எதிரிகள் இருவரையும் 17.05.2008 அன்று அதிகாலை 2.30 மணிக்கு கைது செய்து அவர்களை அதிகாலை 4.30 மணிக்கு மீன்சுருட்டி காவல்நிலையம் கொண்டு வந்தார். அவர்கள் இருவரையும் தக்க முறைகளின் படி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ரத்தகரை படிந்த மண் மற்றும் ரத்தகரை இல்லாத மண் ஆகியவை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது சம்மந்தப்பட்ட படிவம் 91 (மொத்தம் 7) அ.சா.ஆ.78 வரிசை. (ஒரு படிவம் 91இல் சூலம் உள்ளது). பட்டாகத்திகள் சம்மந்தப்பட்ட படிவம் 91(மொத்தம் 4) அ.சா.ஆ.79 வரிசை.

பின்னர் 17.05.2008 அன்று தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இவ்வழக்கு சம்பவத்தின்போது காயமடைந்த ஜானகி, க.பெ.காசிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் ஜெயக்கொடி, க.பெ.ஹரிகிருஷ்ணன், காசியம்மாள், க.பெ. ரெங்கநாதன், பழனி, த.பெ.கோடிவர்ணன், தணிகாசலம், த.பெ. ரங்கநாதன், சுபாஷ், த.பெ.கொளஞ்சி, முருகானந்தம், த.பெ. பத்மநாபன், அருள், த.பெ.சிவக்கொழுந்து, செல்லப்பன், த.பெ. கோவிந்தசாமி, பாபு, த.பெ.கொளஞ்சி, ராதா, க.பெ. குமரகுரு, சந்திரகலா, க.பெ.குமார், ராஜாத்தி, க.பெ.சாமிதுரை, சாமிதுரை, த.பெ. நசப்பிள்ளை, ராதிகா, க.பெ. அன்பழகன், குமார், த.பெ.ஜெகநாதன், லேகாம்பாள், க.பெ. வீராசாமி, சுதா, க.பெ.மைனர், இளஞ்சியம், க.பெ. குமார், பட்டு, க.பெ. முருகப்பன் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன்.

இவ்வழக்கு சம்பவத்தின்போது காயமடைந்த ஜானகி, ஜெயகொடி, காசியம்மாள் ஆகியோர்களது வாக்குமூலங்களிலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 13 எதிரிகள் நீங்கலாக மேலும் எதிரிகள் ஸ்ரீதர், த.பெ.முத்துகிருஷ்ணன், காளிதாஸ், த.பெ.முத்துவேல், ஜவகர்பாபு, த.பெ.பாஸ்கர், விஜய், த.பெ.வீரகுமார், சுரேஷ், த.பெ.சக்திவேல் ஆகியோரும் சம்மந்தப்பட்டிருப்பது தெரியவந்தது. எனவே மேற்படி

ஐவரையும் இவ்வழக்கு எதிரிகளாக கருதி ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு ஒரு தனி அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த தனிஅறிக்கை அ.சா.ஆ.80.

கடந்த 23.05.2008 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் ரவிசந்திரன், ரமேஷ், த.பெ.சக்திவேல், சிலம்பரசன் ஆகியோர் திருச்சி நீதித்துறை நடுவர் எண்.4 அவர்கள் முன்பாக சரணடைந்தார்கள். 24.05.2008 அன்று இவ்வழக்கின் எதிரி பாஸ்கர் என்பவரை ஜெயங்கொண்டத்திலிருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் குருவாழப்பன் கோவில் அருகில் சாட்சிகள் செங்குட்டுவன், பூராசாமி ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்தேன்.

அப்போது எதிரி பாஸ்கர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காலை 9.00 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி பாஸ்கரன் வழக்கு சம்பவத்திற்கு அவர் பயன்படுத்திய பட்டாகத்தியை வங்குடி சந்திரசேகரன் ரைஸ் மில்லிற்கு பின்புறமுள்ள சவுக்கு தோப்பில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் எதிரி பாஸ்கரை அழைத்து சென்று வங்குடி சந்திரசேகரன் ரைஸ்மில்லின் பின்புறம் உள்ள சவுக்கு தோப்பிலுள்ள முட்புதரிலிருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த வெட்டு பாகம் 1 அடி 21 செ.மீட்டரும், கைப்பிடி 12 செ.மீட்டர் கொண்டதும், மொத்த நீளம் 2 அடி 3 செ.மீட்டர் கொண்டதுமான கத்தி ஒன்றை காலை 10.00 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கத்தி அ.சா.பொ.20.

பின்னர் 03.06.2008 தேதியன்று இவ்வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சரணடைந்த எதிரிகள் ரவிசந்திரன், ரமேஷ்,த.பெ.சக்திவேல், சிலம்பரசன் ஆகியோரை நீதிமன்ற அனுமதியின் பேரில் போலிஸ் காவலில் எடுத்து 03.06.2008 அன்று மீன்சுருட்டி காவல்நிலையம் கொண்டுவந்தேன். அன்றைய தினமே காலை 7.00

மணிக்கு எதிரி ரவிசந்திரன் தானாக முன்வந்து என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கலியமூர்த்தி மற்றும் சாமிநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ரவிசந்திரன் வழக்கு சம்பவத்தின் போது அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை வங்குடி ரைஸ்மில்லின் பின்புறமுள்ள சவுக்கு தோப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் அந்த இடத்தை அடையாளம் காட்டி ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.81.

பின்னர் ரமேஷ், த.பெ.சக்திவேல் என்பவர் தானாக முன்வந்து என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ரமேஷ், த.பெ.சக்திவேல் வழக்கு சம்பவத்தின் போது அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை வங்குடி ரைஸ்மில்லின் பின்புறமுள்ள சவுக்கு தோப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் அந்த இடத்தை அடையாளம் காட்டி ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.82.

பின்னர் எதிரி சிலம்பரசன் என்பவர் தானாக முன்வந்து என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சிலம்பரசன் வழக்கு சம்பவத்தின் போது அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை வங்குடி ரைஸ்மில்லின் பின்புறமுள்ள சவுக்கு தோப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் அந்த இடத்தை அடையாளம் காட்டி ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.83.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்படி எதிரிகளை அழைத்து சென்று மேற்படி எதிரிகளுக்கு மட்டுமே தெரிந்த இடத்திலிருந்து எதிரி

ரவிசந்திரன் எடுத்து ஆஜர் செய்த இரும்பு பூண்போட்ட மரகைப்பிடி 5 அங்குலம், அதில் வெட்டுபாகம் 19–1/2 அங்குலம் மொத்தமாக 24–1/2 அங்குலம் உள்ள ரத்தகரை படிந்த வெட்டுகத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 12.00 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.84. அந்த வெட்டுகத்தி அ.சா.பொ.21.

பின்னர் எதிரி ரமேஷ், த.பெ. சக்திவேல் என்பவர் எடுத்து ஆஜர் செய்த இரும்புகைப்பிடி சுமார் 6–1/2 அங்குலம், வெட்டுபாகம் 23–1/2 அங்குலம் மொத்தமாக 30 அங்குலம் உடைய ரத்தகரை உடைய வெட்டுகத்தி ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 12.15 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.85. அந்த வெட்டுகத்தி அ.சா.பொ.22.

பின்னர் எதிரி சிலம்பரசன் என்பவர் எடுத்து ஆஜர் செய்த பித்தளைபூண் போட்ட மரகைப்பிடி 5 அங்குலம், வெட்டுபாகம் 17–1/2 அங்குலம் மொத்தமாக 22–1/2 அங்குலம் உடைய ரத்தகரையுடன் கூடிய அருவாள் ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 12.30 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.86. அந்த அருவாள் அ.சா.பொ.23.

04.06.2008 அன்று மேற்படி எதிரிகள் மூவரையும் போலிஸ் காவல் முடித்து நீதிமன்றத்தில் முறைப்படி ஆஜர்படுத்தினேன்.

18.06.2008 அன்று இவ்வழக்கில் ஒரு எதிரியான காளிதாஸ் என்பவரை மீன்சுருட்டி காவல்நிலைய சரகம் ராமேட்டுத்தெரு பேருந்து நிறுத்தத்தில் வைத்து காலை 9.00 மணிக்கு கைது செய்தேன். அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை சாட்சிகள் சத்தியமூர்த்தி, பால்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 9.00 மணிக்கு பதிவு செய்தேன். எதிரி காளிதாஸ் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தின்போது அவரால்

பயன்படுத்தப்பட்ட அருவாளை வண்ணாங்குளம் மேல்கரை தண்ணீரில் போட்டுவிட்டதாகவும், அவரை அழைத்து சென்றால் அந்த அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.87.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து தெரியவந்த சங்கதியின் அடிப்படையில் வங்குடி வண்ணாங்குளம் மேல்கரையில் எதிரி காளிதாஸ் என்பவருக்கு மட்டும் தெரிந்த இடத்திலிருந்து அவர் எடுத்து கொடுத்த வெட்டுபாகம் 16 அங்குலம் பித்தளை பூணுடன் கூடிய மரகைப்பிடி சுமார் 1/2 அடி (6 அங்குலம்) மொத்தமாக 22 அங்குலம் உடைய முனை வளைந்துள்ள அருவாள் ஒன்றை அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்பாக ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.88. கைப்பற்றப்பட்ட அருவாள் அ.சா.பொ.24.

பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரிகளுடன் நிலையம் திரும்பினேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட மேற்படி அனைத்து ஆயுதங்களையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஆயுதங்கள் சம்மந்தப்பட்ட படிவம் 91(மொத்தம் 5 எண்ணிக்கை) அ.சா.ஆ.89 வரிசை.

25.06.2008 அன்று இவ்வழக்கின் எதிரி விஜய்(எ) விஜயகுமார், த.பெ.வீரகுமார் என்பவரை 14.00 மணிக்கு ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் காட்டுமன்னார்குடிக்கு செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கு அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்து அவரை 15.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்தேன். அவரை தக்கமுறைப்படி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

16.05.2008 அன்று பிரேதபரிசோதனையின் போது இறந்துபோன தர்மலிங்கம் என்பவரது பிரேதத்திலிருந்து அகற்றப்பட்டு த.கா.முருகேசன் என்பவர் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்தகரையுடன் கூடிய கருப்புபிரௌன் கலர் கொண்ட கிழிந்த லுங்கி ஒன்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95

அ.சா.ஆ.90. லுங்கி அ.சா.பொ.25.

16.05.2008 அன்று பிரேதபரிசோதனையின் போது இறந்துபோன காசிநாதன் என்பவரது பிரேதத்திலிருந்து அகற்றப்பட்டு த.கா.628 திரு.கோவிந்தராஜன் என்பவர் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்தகரையுடன் கூடிய பிரௌன், நீலம் கோடு போட்ட கட்டம் போட்ட கிழிந்த லுங்கி ஒன்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.91. லுங்கி அ.சா.பொ.26.

16.05.2008 அன்று பிரேதபரிசோதனையின் போது இறந்துபோன மகாலிங்கம் என்பவரது பிரேதத்திலிருந்து அகற்றப்பட்டு த.கா.628 திரு.கோவிந்தராஜன் என்பவர் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்தகரை படிந்த சிமெண்ட் கலர் உள்ள கிழிந்த காட்டன் டீ சர்ட் ஒன்று, ரத்தகரையுடன் கூடிய வெள்ளை நிற கிழிந்த முண்டாபனியன் ஒன்று, வெள்ளை, ஊதா, கருப்பு நிறங்களில் கட்டம்போட்ட ரத்தகரையுடன் கூடிய கிழிந்த லுங்கி ஒன்று ஆகியவற்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.92. டீ சர்ட் அ.சா.பொ.27(நீலம்கலந்த நிறத்தில் உள்ளது). முண்டா பனியன் அ.சா.பொ.28. லுங்கி அ.சா.பொ.29.

16.05.2008 அன்று பிரேதபரிசோதனையின் போது இறந்துபோன சுரேஷ் என்பவரது பிரேதத்திலிருந்து அகற்றப்பட்டு த.கா.495 திரு.அன்பழகன் என்பவர் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்தகரையுடன் கூடிய பொடிகலர் மஞ்சள்நிற கிழிந்த முழு கை சட்டை ஒன்று, ரத்தகரையுடன் கூடிய ஊதா நிறத்தில் கட்டம்போட்ட லுங்கி ஒன்று ஆகியவற்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.93. முழு கை சட்டை அ.சா.பொ.30. லுங்கி அ.சா.பொ.31.

16.05.2008 அன்று பிரேதபரிசோதனையின் போது இறந்துபோன பிரபு என்பவரது பிரேதத்திலிருந்து அகற்றப்பட்டு த.கா.671 திரு.முருகன் என்பவர் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்தகரை படிந்த வள்ளை காப்பி கலர் கட்டம் போட்ட கிழிந்த லுங்கி ஒன்று, ரத்தகரையுடன் கூடிய வெள்ளை நிற கிழிந்த முண்டாபனியன் ஒன்று, புளூ வெள்ளை கட்டம் போட்ட கிழிந்த முழு கை சட்டை ஒன்று ரத்தகரையுடன் கூடியது ஆகியவற்றை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.94. லுங்கி

அ.சா.பொ.32. முண்டா பனியன் அ.சா.பொ.33. முழு கை சட்டை அ.சா.பொ.34.

மேற்கண்ட வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்கண்டவாறு என்னால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், சூலம், ரத்தம் தோய்த மண், ரத்தம் இல்லாத மண் இறந்தவர்களின் உடல்களிலிருந்து கைப்பற்றப்பட்ட உடைகள் ஆகியவற்றை ரசாயனபகுப்பாய்விற்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற்றுத்தரும்படி ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பிற்சேர்க்கை ஆகியவை அ.சா.ஆ.95.

இறந்துபோன பிரபுவின் உடலில் கழுத்து பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட தசை பகுதி மற்றும் அவரது துண்டிக்கப்பட்ட தலையின் கீழ் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட தசை பகுதி ஆகியவற்றையும், கொலை செய்யப்பட்ட தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது பிரேதத்தில் கழுத்து பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட தசை பகுதி மற்றும் அவரது துண்டிக்கப்பட்ட தலையின் கீழ் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட தசை பகுதி ஆகியவற்றையும் ஆய்வு செய்து அவை ஒரே உடலினை சேர்ந்ததா என்று அறிக்கை பெறகோரி நீதித்துறை நடுவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.96.

**நேரம் மாலை 5.25 மணி ஆகிவிட்டதால் சாட்சியின் முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.